# FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS
# தமிழ்மாநிலம்

தேதி:-30.12.2015

## ’SERVICE WITH A SMILE’ (SWAS)
## வெற்றிகரமாக்குவோம் 100 நாள் திட்டத்தை

அன்பார்ந்த தோழர்களே,

’புன்னகையுடன் கூடிய சேவை’ என்ற பெயரில் நமது அகில இந்திய FORUM அறிவித்துள்ள திட்டத்தை தமிழகத்தில் அமுலாக்குவதற்காக தமிழ் மாநில FORUMத்தின் கூட்டம் சென்னையில் 30.12.2015 அன்று நடைபெற்றது. FORUMத்தின் தலைவர் தோழர் R.பட்டாபி ராமன் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் FORUMன் கன்வீனர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆய்படு பொருட்களை பற்றி விளக்கமளித்தார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களின் விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டது:-

- நமது அகில இந்திய FORUM ’புன்னகையுடன் கூடிய சேவை’ என்ற பெயரில் அறிவித்துள்ள 100 நாட்கள் திட்டத்தை தமிழகத்தில் வெற்றிகரமாக்கிட அனைத்து சங்கங்களும் முழு ஒத்துழைப்பு தருவது.
- அனைத்து மாவட்ட FORUMகளும் உடனடியாக கூடி “SERVICE WITH A SMILE” 100 நாள் திட்டத்தை தங்களின் மாவட்டங்களில் அமுலாக்குவது தொடர்பாக உடனடியாக விவாதித்து முடிவு எடுக்க வேண்டும். முடிந்த இடங்களில் FORUMல் உள்ள சங்கங்களின் இணைந்த மாவட்ட செயற்குழுக்களைக் கூட்டி கூட விவாதிக்கலாம்.
- அந்த FORUM கூட்டங்களிலேயே மாவட்டங்களில் பற்றாக்குறையாக உள்ள கருவிகள்/ பொருட்கள் தொடர்பாக ஸ்தூலமாக பரிசீலித்து, தேவைகளை மாவட்ட நிர்வாகத்திற்கு எழுத்து பூர்வமாக தெரிவித்து விவாதித்து மாநில FORUMத்திற்கு தகவல் அனுப்ப வேண்டும். அவற்றை தொகுத்து மாநில நிர்வாகத்திற்கு மாநில FORUM கொடுத்து விவாதித்து உடனடியாக அதன் விவரங்களை அகில இந்திய FORUMக்கு அனுப்புவது.
- BSNL பொருட்களை விளம்பரப்படுத்தும் நோக்கத்துடன் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும், 2016, ஜனவரி 8ஆம் தேதி ”ஜாதா”க்களை நடத்துவது.
- ’புன்னகையுடன் கூடிய சேவை’ என்ற பெயரில் அறிவித்துள்ள 100 நாட்கள் திட்டத்தைப்பற்றி விரிவான ஒரு சுற்றறிக்கையினை தமிழ் மாநில FORUM சார்பாக சங்கங்களின் இணையதளங்களில் வெளியிடும். அதனை அந்தந்த மாவட்ட FORUMகள் NOTICEஆக அச்சடித்து அனைத்து ஊழியர்களுக்கும் தவறாமல் வினியோகிக்க வேண்டும்.
- மாநிலம் தழுவிய ’புன்னகையுடன் கூடிய சேவை’ கருத்தரங்கம் ஒன்றை 2016ஆம் ஆண்டு பொங்கலுக்கு பின் அகில இந்திய தலைவர்கள் மற்றும் தலைமை பொது மேலாளர் ஆகியோரை உள்ளடக்கி நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அகில இந்திய FORUM மற்றும் தமிழக FORUM எடுத்துள்ள முடிவுகளை தமிழகத்தில் நாம் முழுமையாக அமுல்படுத்துவோம். நிறைவான சேவையை மக்களுக்கு புன்னகையுடன் கொடுத்து மக்களின் சொத்தான BSNLஐ காத்திடுவோம்.

. வாழ்த்துக்களுடன்,

| | | | | |
|---|---|---|---|---|
| **(A.BABU RADHAKRISHNAN)** | **(R.PATTABI RAMAN)** | **(R.RAJASEKAR)** | **(S.SIVAKUMAR)** | **(M.S.RADHAKRISHNAN)** |
| **CONVENOR, FORUM & CS BSNLEU** | **PRESIDENT, FORUM& CS NFTE BSNL** | **CS SNEA** | **CS AIBSNLEA** | **CS AIBSNLOA** |